OPEN ACCESS

Manuscript ID:
TAM-06022021-4424

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 18.06.2021

Accepted: 26.07.2021

Published: 01.10.2021

Citation:
Prabakaran, T., and L. Sundaram. "Tamiḻkkāppulyam - An Adaptation and Exclusion of Grammatical Concepts of Tolkāppiyam and Nannūl." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 163–72.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4424

*Corresponding Author:
prabakat@srmist.edu.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tamiḻkkāppu Iyam - An Adaptation and Exclusion of Grammatical Concepts of Tolkāppiyam and Nannūl

**T. Prabakaran**
*Research Scholar, Department of Tamil*
*SRM Institute of Science and Technology*
*Kattankulathur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-8325-1483

**Dr. L. Sundaram**
*Assistant Professor, Department of English & Foreign Languages*
*SRM Institute of Science and Technology, Kattankulathur, Tamil Nadu, India*

**Abstract -** In the history of Tamil grammar, there are many significant grammar books after the advent of Tholkappiyam and Nannul. In line with that, M. Kasuman's Tamil Kappu Iyam, published in 2005, is one among them. This article attempts to throw light on whether Tamil Kappu Iyam can be treated as the modern version of Tholkappiyam, apart from this, It also endeavours to bring out where the author has adopted the old grammatical concep,ts as found in Tholkappiyam and Nannul, what are the grammatical concepts have been modified and what are the new grammatical concepts introduced by him.

**Keywords:** Tolkappiyam, Nannul, Tamilkappu Iyam, Modern Tolkappiyam, New Tamil Grammar, M. Kasuman

**References**

1. Iḻavaracu cōma. (1998). *Naṉṉūl.* Ceṉṉai, maṉivācakaḻar patippakam.
2. Tiruñāṉacampantam ca. (2006). *Naṉṉūl kāṉṉikai urai*, Tiruvaiyāru, Katir patippakam.
3. Cuppiramaṉiyaṉ ca.Vē. (2007) *Tamiḻ ilakkaṉa nūlkaḻ*, Ceṉṉai, meyyappaṉ patippakam.
4. Aḻakēcaṉ cu. (2007). *Ilakkaṉap pārvaikaḻum pativukaḻum…*, Ceṉṉai, cēkar patippakam.
5. Cuntaram ila. (2008). *Tolkāppiyam (māṉavar urai)*, Ceṉṉai, mallikā patippakam.
6. Vēlmayil ta. (2010). *Naṉṉūlum piṉṉaiya ilakkaṉa nūlkaḻum*, Ceṉṉai, kāvyā patippakam.
7. Tiruñāṉacampantam ca. (2011). *Tolkāppiyam (eḻuttu)*, Tiruvaiyāru, katir patippakam.
8. Kaṉēcaiyar (U. Ā), (2012). *tolkāppiyam collatikāram*, Ceṉṉai, amirtā patippakam.
9. Kācumāṉ Mi. (2015). *Tamiḻkkāppu iyam*, Mārttāṉtam, kācumāṉ patippakam.

# தொல்காப்பியம், நன்னூலிலிருந்து தமிழ்க்காப்பு இயம் தழுவியதும் தவிர்த்ததும்

*த. பிரபாகரன்*
முனைவர்பட்ட ஆய்வாளர், ஆங்கிலம் (ம) அயல்மொழிகள் துறை
SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், தமிழ்நாடு, இந்தியா

*இல. சுந்தரம்*
துணைப்பேராசிரியர், ஆங்கிலம் (ம) அயல்மொழிகள் துறை
பொறியியல் கல்லூரி, SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியத்திற்கு அடுத்து நன்னூல் அனைவராலும் போற்றப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருகின்றது. இவற்றைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் மரபு சார்ந்தும் மொழியியல் சார்ந்தும் வெளிவந்துள்ளன. இந்த வரிசையில் 2005ஆம் ஆண்டில் மி. காசுமான் எழுதி வெளிவந்த தமிழ்க்காப்பு இயம் என்ற நூலைக் "புதுத் தொல்காப்பியம்" என்று கூறமுடியுமா? என்பதை ஆராய்கிறது. தமிழ்க்காப்பு இயத்தில் மி. காசுமான் எந்தெந்தத் தொல்காப்பிய, நன்னூல் நூற்பாக்களை எந்தவித மாற்றங்களும் செய்யமால் அப்படியே எடுத்தாண்டுள்ளார்; எந்தெந்த நூற்பாக்களில் மாற்றங்களைச் செய்துள்ளார்; எந்தெந்த நூற்பாக்களை விடுத்துப் புதிய நூற்பாக்களை உருவாக்கியுள்ளார் என்பதையும் இந்நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். இவற்றை ஆராய்ந்து அதன் இலக்கணக் கூறுகளைப் பகுத்துப் பார்த்தால் மொழியில் ஏற்பட்ட வளர்ச்சியையும் வழக்கொழிந்தவற்றையும் கண்டறியலாம். தொல்காப்பிய, நன்னூல் வரிசையில் சமகால மரபுத் தமிழிலக்கண நூலாக இதனைக் கருதலாமா? என்றும் தொல்காப்பியம், நன்னூல் கூறிய இலக்கணங்களுள் எவையெவற்றைத் தமிழ்க்காப்பு இயம் தழுவியுள்ளது; தவிர்த்துள்ளது என்பதையும் இக் கட்டுரை ஆராய முற்படுகிறது.*

***முதன்மைச்சொற்கள்:*** *தொல்காப்பியம், நன்னூல், தமிழ்க்காப்பு இயம், நவீனத் தொல்காப்பியம், புதிய தமிழ் இலக்கணம், மி. காசுமான்*

## முன்னுரை

தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் முதல் நல்ல தமிழ் இலக்கணம் வரை அவ்வக்கால மொழி வளர்ச்சியை உள்ளடக்கி புதியனவற்றைச் சேர்த்தும் வழக்கொழிந்தவற்றை நீக்கியும் திரிபடைந்தவற்றை மாற்றியும் நூற்பா, உரைநடை, வினாவிடை வடிவங்களில் நூற்றுக்கணக்கான இலக்கண நூல்கள் வெளிவந்துள்ளன. 20ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியான சமகாலத்திலும் மொழியியல் துறையின் வளர்ச்சியாலும் ஆங்கில இலக்கணத்தின் ஒப்பீட்டினாலும் பிறமொழியினருக்குத் தமிழைக் கற்றுத்தருதல் நிலையிலும் பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்துப் புரிந்துகொள்ளுதல் நிலையிலும்

பயன்பாட்டுத் தமிழ் இலக்கணம் (Applied Grammar) என்ற நிலையிலும் இலக்கண நூல்கள் பல தோற்றம்பெற்றுள்ளன. நூற்பா - வினாவிடை - உரைநடை என்ற வரிசையில் இலக்கண நூல்கள் இலக்கணத்தைச் சொல்லும் முறையில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் உரைநடை வளர்ந்த; இலக்கணத்தை நூற்பா வடிவில் மனப்பாடம் செய்யவேண்டிய தேவை இல்லாத காலகட்டத்தில் 2005ஆம் ஆண்டு மீண்டும் நூற்பா (செய்யுள்) வடிவில் ஓர் இலக்கண நூல் வெளிவந்துள்ளது என்பது பலரது கவனத்தை ஈர்க்கக்கூடியது. இவ்வாறு எழுதுவதற்கான காரணத்தையும் நூலின் புதுமை, சிறப்பியல்பு, மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தொல்காப்பியம், நன்னூல் முழுவதையும் அப்படியே முழுமையாகத் தற்போது கற்கத் தேவையில்லாத நிலையில், இவை கூறிய இலக்கணங்களுள் வழக்கொழிந்தவற்றை நீக்கியும் மாற்றம்பெற்ற, புதிதாகத் தோன்றிய இலக்கணங்களை உள்ளடக்கி தொல்காப்பிய நன்னூலின் சமகாலப் பயன்பாட்டுச் சுருக்கமாகத் தமிழ்க் காப்பியத்தைக் கருதலாமா என்பது ஆய்விற்குரியது.

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் (483), சொல்லதிகாரத்தில் (463) காணப்படும் 946 நூற்பாக்கள், நன்னூலின் எழுத்ததிகாரம் (202), சொல்லதிகாரத்தில் (205) காணப்படும் 407 நூற்பாக்களில் கூறிய இலக்கணங்களை சமகாலப் பயன்பாடு கருதியும் அதேநேரம் பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்துப் புரிந்துகொள்வதற்குரிய இலக்கணமாகவும் உருவாக்கவேண்டும் எனும் நோக்கத்தில் வழக்கொழிந்தவற்றை நீக்கியும் புதியனவற்றைச் சேர்த்தும் மாற்றம் பெற்றவற்றை மேம்படுத்தியும் 620 நூற்பாக்களுக்குள் தமிழ் இலக்கணத்தைத் தமிழ்க்காப்பு இயம் சுருக்கியுரைக்கிறது.

## நூலும் ஆசிரியரும்

குமரி மாவட்டத்திலுள்ள குளச்சலைச் சார்ந்த புலவர் மி. காசுமான் "தமிழ்த்தாய் எழுத்திலக்கணம்" (1992), "தமிழ்த்தாய் சொல்லிலக்கணம்" (1998), "தமிழ்த்தாய் சொற்புணர்ச்சி இலக்கணம்" (2003) என்னும் நூல்களை வெளியிட்டுள்ளார். பின்னர் இவை மூன்றையும் தொகுத்து முறைப்படுத்தி "தமிழ்க்காப்பு இயம்" என்ற பெயரில் 2005-ல் முதல் பதிப்பாக காசுமான் பதிப்பகம் என்னும் தனது சொந்தப் பதிப்பத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு வ.ஐ. சுப்பிரமணியம், ச. அகத்தியலிங்கம், தமிழண்ணல், பொற்கோ, தே. ஆண்டியப்பன், கி. நாச்சிமுத்து ஆகியோர் முன்னுரை, அணிந்துரை, சிறப்புரைகளை வழங்கியுள்ளனர். இதன்மூலம் மரபிலக்கண அறிஞர்களும் மொழியியல் அறிஞர்களும் ஏற்றுக்கொண்ட ஒரு நூலாக இது 2005ல் முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது.

620 நூற்பாக்களில் எழுத்து, சொல், சொற்புணர்ச்சி இலக்கணங்களை இந்நூல் 382 பக்கங்களில் கூறியுள்ளது. (1) "நூற்பா" - (2) "இது எதைப் பற்றிக் கூறுகிறது" - (3) "இதன் பொருள்" என்ற மூன்று பகுப்புகளில் நூற்பாவையும் அதன் விளக்கத்தையும் இளம்பூரணர் உரை வழங்கிய வடிவிலேயே இந்நூலாசிரியரும் வழங்கியுள்ளார்.

## தமிழ்க்காப்பு இயம் பெயர்க்காரணம்

தமிழ்+காப்பு+இயம் = தமிழ்க்காப்பியம். தமிழ்க்காப்பியம் என்பது தமிழினது பாதுகாப்பிற்கு உரிய இலக்கணத்தை நூற்பா இசையோடு சொல்லும் நூல். (த.கா.இ. ப.7) தமிழைக் காத்து, வளர்க்க அமைக்கும் அகத்திற்குத் "தமிழ்க்காப்பகம்" என்று பெயர் வைப்பது போன்று தமிழினது காவலாக ஆக்கப்பட்ட இவ்விலக்கண நூலுக்குத் "தமிழ்க்காப்பு இயம்" என்று காரண இடுகுறிப் பெயராக வைத்துள்ளேன். (த.கா.இ. ப.8) என்ற கூற்றின்வழி பெயர்க்காரணத்தை அறியமுடிகிறது.

## செய்யுள் வடிவிலமைந்த இலக்கண நூல்கள் வரிசையில் தமிழ்க்காப்பு இயம்

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உரைநடை வடிவிலும் வினாவிடை வடிவிலும் இலக்கண நூல்கள் பெருவழக்காகப் பயன்பாட்டில் வெளிவந்துள்ளன. இந் நிலையில் செய்யுள் வடிவிலேயே தமிழ் இலக்கணத்தைக் கூறும் நூல்களாக த. சரவணத்தமிழனின் தமிழ்நூல் (1972), ச. பாலசுந்தரத்தின் தென்னூல் (1991), வளர்தமிழ் இலக்கணம் (2003) ஆகியவற்றின் தொடர்ச்சியாக மி. காசுமானின் தமிழ்க் காப்பு இயம் (2005) வெளிவந்துள்ளது.

## நூலமைப்பு

எழுத்திலக்கணம் (3), சொல்லிலக்கணம் (8), சொற்புணர்ச்சி இலக்கணம் (4) என்னும் 3 பகுப்புகளில் 15 இயல்களில் 620 நூற்பாக்களில் தமிழ் இலக்கணத்தைத் தமிழ்க்காப்பு இயம் எடுத்தியம்புகிறது. காண்க பட்டியல்-1 மி. காசுமான் தமிழ்க்காப்பு இயம் நூற்பாக்களை 1, 2, 3 என வரிசை எண்ணிட்டுக் கூறி வருகையில் வரிசை எண்களுக்கு அருகில் சிறப்புக் குறியீடுகளைக் குறிப்பிட்டு அடிக்குறிப்பாக அந்தக் குறிப்பிட்ட எண்ணுடைய நூற்பா எந்தத் தொல்காப்பிய, நன்னூல் நூற்பா என்றும், நூற்பாவின் திரிபு என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

## தொல்காப்பியம் - நன்னூல் - தமிழ்க்காப்பு இயம் கட்டமைப்பு வேறுபாடு

தொல்காப்பியம் எழுத்திலக்கணத்தை எழுத்ததிகாரமாக 9 இயல்களிலும், சொல்லிலக்கணத்தை 9 இயல்களில் சொல்லதிகாரமாகக் கூறியது போலவே நன்னூல் எழுத்ததிகாரத்தில் 5 இயல்களிலும் சொல்லதிகாரத்தில் 5 இயல்களிலும் எழுத்து, சொல் இலக்கணங்களை எடுத்துரைக்கிறது. இவ் வரிசையில் தமிழ்க்காப்பு இய ஆசிரியர் எழுத்து, சொல் அதிகாரங்களாக இல்லாமல் எழுத்திலக்கணத்தை 3 இயல்களிலும் சொல்லிலக்கணத்தை 8 இயல்களிலும் சொற்புணர்ச்சியிலக்கணத்தை 4 இயல்களிலும் எனத் தமிழிலக்கணத்தை மூன்று பிரிவுகளில் 15 இயல்களில் வகைப்படுத்தியுள்ளார்.

தொல்காப்பியம் எழுத்திலக்கணத்தைத் 483 நூற்பாக்களிலும் சொல்லிலக்கணத்தைத் 463 நூற்பாக்களிலும் கூறியவற்றை நன்னூல் எழுத்திலக்கணத்தை 202 நூற்பாக்களிலும் சொல்லிலக்கணத்தை 205 நூற்பாக்களிலும் சுருக்கியுரைக்கிறது. ஆனால் தமிழ்க்காப்பு இயம், தொல்காப்பியம், நன்னூலில் இடம்பெற்றுள்ள எழுத்திலக்கணத்தை 142 நூற்பாக்களின் வழி சுருக்கியுரைக்கிறது. இதே போல் தொல்காப்பியம், நன்னூலில் இடம்பெற்றுள்ள சொல்லிலக்கணத்தை 311 நூற்பாக்களின்வழி சுருக்கியுரைக்கிறது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தின் முதல் 3 இயல்களில் 103 நூற்பாக்களின்வழி எழுத்துகளின் இலக்கணத்தையும் பின் 6 இயல்களில் 130 நூற்பாக்களின்வழி புணர்ச்சி இலக்கணத்தையும் கூறியுள்ளார். அதேபோன்று நன்னூலாரும் எழுத்ததிகாரத் தில் முதல் இயலில் 72 நூற்பாக்களின்வழி எழுத்திலக்கணத்தையும் பின்னுள்ள 4 இயல்களில் 380 நூற்பாக்களின் வழி புணர்ச்சி இலக்கணத்தையும் கூறியுள்ளார். இவற்றைத் தமிழ்க்காப்பு இயம் எழுத்து, சொல்லிலக்கணங்களுக்குள் அல்லாமல் புதிதாக 3வது பகுதியில் சொற்புணர்ச்சி இலக்கணமாக 4 இயல்களில் 167 நூற்பாக்களில் கூறியுள்ளது. காண்க பட்டியல்-2

ஜீ.யூ. போப்-ன் "தமிழ் இலக்கணம்" (1855) வினா-விடை நூலில் "சொற்றொடரியல்" என்றும் த.சரவணத் தமிழனின் "தமிழ் நூலில்" (1972) "சொற்புணர்ச்சி இலக்கணம்" என்றும் "வளர்தமிழ் இலக்கணத்தில்" (2003) "சொற்புணர்ச்சி" என்றும் கூறியிருப்பது நோக்குதற்குரியது.

### தொல்காப்பிய நூற்பாக்களின் பயன்பாடு

எழுத்திலக்கணத்தைத் தமிழ்க்காப்பு இயம் 142 நூற்பாக்களில் எடுத்துரைக்கிறது. இவற்றுள் 22 தொல்காப்பிய நூற்பாக்கள் எந்தவித மாற்றங்களும் செய்யாமல் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. இதேபோல் சொல்லிலக்கணத்தில் 49 நூற்பாக்களையும் எழுத்து, சொல்லதிகாரங்களில் காணப்பட்ட சொற்புணர்ச்சி இலக்கணம் கூறும் 22 நூற்பாக்கள் என மொத்தம் 93 தொல்காப்பிய எழுத்து, சொல்லதிகார நூற்பாக்கள் தமிழ்க்காப்புஇயத்தில் அப்படியே சேர்க்கப்பட்டுள்ளன. காண்க பட்டியல்-3

அடுத்த நிலையில் மாற்றியமைக்கப்பட்ட தொல்காப்பிய நூற்பாக்களாக எழுத்திலக்கணத்தில் 14 நூற்பாக்களும் சொல்லிலக்கணத்தில் 9 நூற்பாக்களும் சொற்புணர்ச்சியிலக்கணத்தில் 8 நூற்பாக்களுமென மொத்தம் 31 நூற்பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. காண்க பட்டியல்-4

### நன்னூல் நூற்பாக்களின் பயன்பாடு


தொல்காப்பியத்தைத் தொடர்ந்து எழுத்திலக்கணத்தில் 7 நன்னூல் நூற்பாக்களும் சொல்லிலக்கணத்தில் 23 நூற்பாக்களும் சொற்புணர்ச்சி இலக்கணத்தில் 12 நூற்பாக்களும் என மொத்தம் 42 நன்னூல் நூற்பாக்கள் எந்தவித மாற்றங்களுமின்றி தமிழ்க்காப்பு இயத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. காண்க பட்டியல்-5

அடுத்த நிலையில் மாற்றியமைக்கப்பட்ட நன்னூல் நூற்பாக்களாக எழுத்திலக்கணத்தில் 10 நூற்பாக்களும் சொல்லிலக்கணத்தில் 7 நூற்பாக்களும் சொற்புணர்ச்சியிலக்கணத்தில் 3 நூற்பாக்களுமென மொத்தம் 20 நன்னூல் நூற்பாக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. காண்க பட்டியல்-6

மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில் எழுத்து, சொல், சொற்புணர்ச்சி என்னும் மூன்று பகுதிகளில் மி. காசுமான் தொல்காப்பியம், நன்னூல் நுற்பாக்களை மாற்றங்கள் செய்தும்; செய்யாமலும் எத்தனை நூற்பாக்களைப் பயன்படுத்தியுள்ளார், ஒவ்வொரு பகுதியிலும் எத்தனையெத்தனை புதிய நூற்பாக்களை அமைத்துள்ளார் என்பனவற்றைப் பின்வரும் பட்டியலும் படங்களும் தெளிவாக விளக்கும்.

| நூல் | எழுத்திலக்கணம் | சொல்லிலக்கணம் | சொற்புணர்ச்சி இலக்கணம் | மொத்த நூற்பா |
|---|---|---|---|---|
| தமிழ்க்காப்பு இயம் புதிதாக அமைத்த நூற்பாக்கள் | 89 | 223 | 122 | 434 |
| தொல்காப்பிய நூற்பாக்கள் | 22 | 49 | 22 | 93 |
| மாற்றியமைக்கப்பட்ட தொல்காப்பிய நூற்பாக்கள் | 14 | 09 | 08 | 31 |
| நன்னூல் நூற்பாக்கள் | 07 | 23 | 12 | 42 |
| மாற்றியமைக்கப்பட்ட நன்னூல் நூற்பாக்கள் | 10 | 07 | 03 | 20 |
| **மொத்த நூற்பாக்கள்** | 142 | 311 | 167 | 620 |

| நூல் | மொத்த நூற்பா |
|---|---|
| தமிழ்க்காப்பு இயம் புதிதாக அமைத்த நூற்பாக்கள் | 434 |
| தொல்காப்பிய நூற்பாக்கள் | 124 |
| நன்னூல் நூற்பாக்கள் | 62 |
| மொத்த நூற்பாக்கள் | 620 |




இந்தத் தரவுகளைப் பார்க்கும்போது தமிழ்க்காப்பு இயத்தில் உள்ள 620 நூற்பாக்களுள் 93 தொல்காப்பிய நூற்பாக்களையும் 42 நன்னூல் நூற்பாக்களையும் எந்தவித மாற்றங்களும் செய்யாமல் அப்படியே பயன்படுத்தியுள்ளார். மேலும், 31 தொல்காப்பிய நூற்பாக்களையும் 20 நன்னூல் நூற்பாக்களையும் சிறிது மாற்றியமைத்துப் பயன்படுத்தியுள்ளார். ஆக 20% (124) விழுக்காடு தொல்காப்பிய நூற்பாக்களையும் 10% (62) நன்னூல் நூற்பாக்களையும் பயன்படுத்தியுள்ளார். இதன்மூலம் தொல்காப்பியம் நன்னூல் கூறிய சில இலக்கணங்கள் இன்றும் எந்தவித மாற்றங்களுமின்றி பயன்பட்டுவருகின்றது என்பதைக் குறிக்கிறது.

### தொல்காப்பியம், நன்னூல் நூற்பாக்களை மாற்றியமைத்தல்

தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் மாற்றியமைக்கப்பட்ட வகையில் 51 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்திலும் இலக்கணக் கூறுகளில் எந்தவித மாற்றங்களோ, சேர்க்கைகளோ, நீக்கங்களோ செய்யப்படவில்லை. அவை சொல்லுகிற முறையில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

### ஏற்பும் மறுப்பும்

தொல்காப்பியம் கூறிய இலக்கணக் கூறுகளை ஏற்றும் நன்னூல் கூறும் இலக்கணங்களைப் பெரும்பாலும் மறுத்தும் தமிழ்க்காப்பு இயத்தை எழுதியுள்ளார். எனினும், தொல்காப்பியர் கூறிய நூற்பாவின் சுருக்கமான வடிவமாக நன்னூல் நூற்பாக்கள் அமைந்துள்ளதால் அந்நூற்பாக்களை அப்படியே கையாள்வதாகவும் இந்நூலாசிரியர் கூறுகிறார்.

நன்னூலிலும் அதற்குப் பிந்தைய இலக்கண நூல்களும் சார்பெழுத்து மற்றும் வேற்றுமை இலக்கணங்களைக் கூறுவதில் தவறுள்ளதாகக் கருதியே தமிழ்க்காப்பு இயம் என்ற நூலினை எழுதியதாகக் கூறுகிறார். நன்னூலின் எழுத்தியலிலும் வேற்றுமையியலிலும் தொல்காப்பியம் கருத்துக்கு முரணாகவும் தமிழ் அமைதிக்குப் பொருந்தாமலும் கூறப்பட்டவை உள (த.கா.இ. ப.1)

வினைமுற்று விகுதிகளைக் கூறும்போது தொல்காப்பியம், முத்துவீரியம், தென்னூல் தன்மை-படர்க்கை-முன்னிலை என்ற வரிசைமுறையில் கூறுகிறது. நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம், தமிழ்நூல், தமிழ்க் காப்பு இயம் ஆகியன படர்க்கை - தன்மை - முன்னிலை என்ற வரிசையில் கூறுகின்றன. தொன்னூல் விளக்கம் மட்டும் தன்மை-முன்னிலை-படர்க்கை என்று ஆங்கிலமொழியின் தாக்கத்தினால் இவ்வரிசை முறையில் கூறுகின்றது.

### முடிவுரை

தொல்காப்பியம், நன்னூல் கூறிய இலக்கணங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தபிறகும் மாற்றமின்றி தொடர்ந்து பயன்பாட்டில் இருந்துவருகிறது. மேலும், இத்தகைய இலக்கணங்களைத் தொல்காப்பிய நன்னூல் கூறிய நூற்பாவைவிட இன்னும் எளிமையாக உருவாக்கமுடியாது; வேண்டாத

நிலையில் தொல்காப்பிய நன்னூல் நூற்பாக்களை அப்படியே மீண்டும் தனது தமிழ்க்காப்பு இயம் நூலில் மி. காசுமான் பயன்படுத்தியுள்ளார். எழுத்து, சொல், புணர்ச்சி இலக்கணங்களைக் கூறும் "சமகாலப் பயன்பாட்டுத் தொல்காப்பியம்" / "புதிய தொல்காப்பியம்" என்று தமிழ்க்காப்பு இயம் நூலினைக் கூறலாம்.

தொல்காப்பியம் நன்னூல் நூற்பாக்கள் மாற்றியமைக்கப்பட்டதன் மூலமாக தொல்காப்பிய நூற்பாக்கள் கூறும் இலக்கணம் மாற்றம் பெற்றுள்ளது அல்லது அது கூறும் முறையைவிட எளிமையாகவும் சுருக்க மாகவும் தற்காலத்திற்கு ஏற்றாற்போல் உருவாக்கமுடியும் என்பதைக் காட்டுகிறது. ஐயாயிரம் ஆண்டுகாலத் தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியம், நன்னூலின் பயன்பாட்டையும் அவற்றின் முக்கியத்து வத்தையும் இத்தகைய தரவுகளின் மூலம் பெறமுடிகிறது.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்:**

த.கா.இ. - தமிழ்க்காப்பு இயம், த.கா.இ.நூ. - தமிழ்க்காப்பு இயம் நூற்பா, தொல். - தொல்காப்பியம், நன்.-நன்னூல், ப. பக்கம், பக். - பக்கங்கள்,

**பார்வை நூல்கள்**

1. இளவரசு சோம. (1998). *நன்னூல்.* சென்னை, மணிவாசகளர் பதிப்பகம்.
2. திருஞானசம்பந்தம், ச. (2006). *நன்னூல் காண்டிகை உரை.* திருவையாறு, கதிர் பதிப்பகம்.
3. சுப்பிரமணியன், ச.வே. (2007). *தமிழ் இலக்கண நூல்கள்.* சென்னை, மெய்யப்பன் பதிப்பகம்.
4. அழகேசன், சு. (2007). *இலக்கணப் பார்வைகளும் பதிவுகளும்.* சென்னை, சேகர் பதிப்பகம்.
5. சுந்தரம், இல. (2008). *தொல்காப்பியம் (மாணவர் உரை).* சென்னை, மல்லிகா பதிப்பகம்.
6. வேல்மயில், த. (2010). *நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும்.* சென்னை, காவ்யா பதிப்பகம்.
7. திருஞானசம்பந்தம், ச. (2011). தொல்காப்பியம் (எழுத்து). திருவையாறு, கதிர் பதிப்பகம்.
8. கணேசையர் (உ. ஆ), (2012). *தொல்காப்பியம் சொல்லதிகாரம்.* சென்னை, அமிர்தா பதிப்பகம்.
9. காசுமான் மி. (2015). *தமிழ்க்காப்பு இயம்.* மார்த்தாண்டம், காசுமான் பதிப்பகம்.

**பட்டியல்-1 தமிழ்க்காப்பு இயம் நூலமைப்பு**

| எழுத்திலக்கணம் (3) | சொல்லிலக்கணம் (8) | சொற்புணர்ச்சி இலக்கணம் (4) |
|---|---|---|
| 1. எழுத்தியல் (114)<br>2. பிறப்பியல் (18)<br>3. பிறமொழியாக்கம் (10) | 1. சொல்லியல் (50)<br>2. பெயரியல் (54)<br>3. வேற்றுமையியல் (26)<br>4. விளிமரபு (20)<br>5. வினையியல் (64)<br>6. இடையியல் (29)<br>7. உரியியல் (17)<br>8. ஒழிபியல் (50) | 1. புணரியல் (32)<br>2. இயல்புப் புணர்ச்சி இயல் (29)<br>3. திரிபுப் புணர்ச்சி இயல் (87)<br>4. ஒழிபியல் (19) |
| 142 | 311 | 167 |
| | | மொத்தம் 620 |

**பட்டியல்-2 தொல்காப்பியம் - நன்னூல் - தமிழ்க்காப்பு இயம் கட்டமைப்பு வேறுபாடு**

**எழுத்ததிகாரம்**

| தொல்காப்பிய கி.மு. 5ம் | நூற்பா எண்ணிக்கை | நன்னூல் கி.பி. 13 | நூற்பா எண்ணிக்கை | தமிழ்க்காப்பு இயம் கி.பி. 21 | நூற்பா எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. நூன்மரபு | 33 | 1. எழுத்தியல் | 72 | 1. எழுத்தியல் | 114 |
| 2. மொழிமரபு | 49 | 2. பதவியல் | 23 | 3. பிறமொழியாக்கம் | 10 |
| 3. பிறப்பியல் | 21 | | 0 | 2. பிறப்பியல் | 18 |
| 4. புணரியல் | 40 | | 0 | மொத்தம் | 142 |
| 5. தொகைமரபு | 30 | | 0 | 1. புணரியல் | 32 |
| 6. உருபியல் | 30 | | 0 | 2. இயல்புப் புணர்ச்சி இயல் | 29 |
| 7. உயிர் மயங்கியல் | 93 | 3. உயிரீற்றுப் புணரியல் | 53 | 3. திரிபுப் புணர்ச்சி இயல் | 87 |
| 8. புள்ளி மயங்கியல் | 110 | 4. மெய்யீற்றுப் புணரியல் | 36 | 4. ஒழிபியல் | 19 |
| 9. குற்றியலுகரப் புணரியல் | 77 | 5. உருபுப் புணரியல் | 18 | | |
| மொத்தம் | 483 | மொத்தம் | 202 | மொத்தம் | 167 |

**சொல்லதிகாரம்**

| தொல்காப்பிய கி.மு. 5ம் | நூற்பா எண்ணிக்கை | நன்னூல் கி.பி. 13 | நூற்பா எண்ணிக்கை | தமிழ்க்காப்பு இயம் கி.பி. 21 | நூற்பா எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. கிளவியாக்கம் | 61 | | | 1. சொல்லியல் | 50 |
| 2. வேற்றுமையியல் | 22 | | | 3. வேற்றுமையியல் | 26 |
| 3. வேற்றுமை மயங்கியல் | 34 | | | | |
| 4. விளிமரபு | 37 | | | 4. விளிமரபு | 20 |
| 5. பெயரியல் | 44 | 1. பெயரியல் | 62 | 2. பெயரியல் | 54 |
| 6. வினையியல் | 50 | 2. வினையியல் | 32 | 5. வினையியல் | 64 |
| 7. இடையியல் | 48 | 4. இடையியல் | 22 | 6. இடையியல் | 29 |
| 8. உரியியல் | 100 | 5. உரியியல் | 21 | 7. உரியியல் | 17 |
| 9. எச்சவியல் | 67 | 3. பொதுவியல் | 68 | 8. ஒழிபியல் | 50 |
| மொத்தம் | 463 | மொத்தம் | 205 | மொத்தம் | 311 |

**பட்டியல்-3 தொல்காப்பிய நூற்பாக்களின் பயன்பாடு தொல்காப்பியம் முழு நூற்பாக்கள்**

| | | |
|---|---|---|
| தொல். எழுத்ததிகாரம் | த.கா.இ. எழுத்திலக்கணம் (தொல்.19, 20, 21, 4, 5, 6, 11, 12, 46, 15, 10, 18, 42, 59, 71, 07, 85, 86, 87, 94, 100, 99) | த.கா.இ. சொற்புணர்ச்சியிலக்கணம் (தொல்.139, 140, 107, 110, 113, 111, 112, 195, 132, 199, 124, 126, 154, 143, 219,220, 178, 285, 306, 418, 444, 435, 405) |
| தொல். சொல்லதிகாரம் | த.கா.இ. சொல்லிலக்கணம் (தொல்.157, 216, 160, 189, 184, 185, 115, 74, 75, 76, 77, 79, 118, 121, 127, 132, 138, 151, 152, 153, 198, 113, 227, 229, 249, 251, 253, 263, 265, 226, 254, 255, 262, 273, 294, 296, 311, 330, 375, 379, 390, 191, 450, 412, 413, 48, 411, 430, 438). | தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களைச் சொற்புணர்ச்சியிலக்கணம் பகுதிக்குக் கொண்டு செல்லவில்லை. |

**பட்டியல்-4 தொல்காப்பியம் திரிபு நூற்பாக்கள்**

| | | |
|---|---|---|
| தொல். எழுத்ததிகாரம் | த.கா.இ. எழுத்திலக்கணம் (தொல்.3, 17, 61, 70, 81, 25, 27, 29, 30, 48, 84, 93, 101) | த.கா.இ. சொற்புணர்ச்சியிலக்கணம் (தொல்.115, 174, 134, 145, 364, 390, 412, 313) |
| தொல். சொல்லதிகாரம் | த.கா.இ. சொல்லிலக்கணம் (தொல்.156, 71, 73, 213, 214, 223, 219, 267, 389) | தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களை மாற்றியமைத்து சொற்புணர்ச்சியிலக்கணம் பகுதியில் எடுத்தாளப்படவில்லை. |

**பட்டியல்-5 நன்னூல் முழு நூற்பாக்கள்**

| | | |
|---|---|---|
| தொல். எழுத்ததிகாரம் | த.கா.இ. எழுத்திலக்கணம் (நன்.101, 124, 126, 109, 210, 73, 79, 81) | த.கா.இ. சொற்புணர்ச்சியிலக்கணம் (நன்.205, 163, 169, 207, 236, 187, 195, 136, ,170, 172, 214, 256) |
| தொல். சொல்லதிகாரம் | த.கா.இ. சொல்லிலக்கணம் (நன்.262, 263, 266, 382, 290, 324, 330, 334, 426, 423, 432, 435, 440, 438, 354, 353, 336, 365, 366, 372, 369, 370, 269) | நன்னூல் சொல்லதிகார நூற்பாக்களைச் சொற்புணர்ச்சியிலக்கணம் பகுதிக்குக் கொண்டு செல்லவில்லை. |

**பட்டியல்-6 நன்னூல் திரிபு நூற்பாக்கள்**

| | | |
|---|---|---|
| தொல். எழுத்ததிகாரம் | த.கா.இ. எழுத்திலக்கணம் *(நன்.58, 96, 122, 123, 107, 72, 88, 147, 148, 149)* | த.கா.இ. சொற்புணர்ச்சியிலக்கணம் *(நன்.162, 165, 186)* |
| தொல். சொல்லதிகாரம் | த.கா.இ. சொல்லிலக்கணம் *(நன்.295, 137, 321, 332, 428, 456, 398)* | நன்னூல் சொல்லதிகார நூற்பாக்களை மாற்றியமைத்து சொற்புணர்ச்சியிலக்கணம் பகுதியில் எடுத்தாளப்படவில்லை. |